# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1986 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, புகையிரத (திருத்தம்) சட்டம்

*[1986, செப்ரெம்பர் மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

**1986, செப்ரெம்பர் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: சதம் 30** **தபாற் செலவு: சதம் 75**

## 1986 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, புகையிரத (திருத்தம்) சட்டம்

[1986 செப்ரெம்பர் 5 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 25/84

### புகையிரதக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, புகையிரத (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

2. புகையிரத கட்டளைச்சட்டத்தின் 38 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

**200 ஆம் அத்தியாயத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

"(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், புகையிரத நிலையமொன்றின் நிலைய அதிபர் ஒருவரின் தரத்திற்குக் குறையாத புகையிரதப் பகுதி அலுவலர் ஒருவர் அல்லது புகையிரதமொன்றின் தலைமைக் காவலர் ஒருவர் அல்லது புகையிரதப் பகுதி பாதுகாப்புச் சேவையின் எவரேனும் உறுப்பினர், புகையிரதமொன்றில் அல்லது பொது முகாமையாளரின் கட்டுப்பாட்டின்கீழுள்ள ஓரிடத்தில், இக்கட்டளைச்சட்டம் அல்லாத எழுத்திலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற எவரேனும் ஆளைப் பிடியாணையொன்றில்லாமல் கைதுசெய்யலாம். தேடுதலிடலாம் அத்துடன் தடுத்தும் வைக்கலாம்; அத்துடன் அத்தகைய எவரேனும் அலுவலர் அத்தகைய ஆளெவரையும் கைதுசெய்யுமிடத்து அல்லது தடுத்துவைக்குமிடத்து, அந்த அலுவலர், அத்தகைய ஆளை, சட்டத்திற்கிணங்க கையாளப்படுவதற்கென பொலிசு அலுவலர் ஒருவரிடம் உடனடியாக ஒப்படைத்தல் வேண்டும்.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.